பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

ஏப்ரல் 2014 ❁ விலை ரூ. 15/-



# மலேசியாவில் ஸ்ரீ மயூர நாத ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா



12.03.14 அன்று காலை தர்பை மூலம் மூலவருக்கு மந்திரம் கூறும் போது மயில் வந்து காணுகின்ற காட்சி

தமிழ்த் தெய்வம் என்று சொன்னால் நம் நினைவுக்கு வருவது முருகப் பெருமான்தான். தமிழ்ப் பாட்டி என்று சொன்னால் நம் நினைவுக்கு வருவது ஔவைப் பிராட்டிதான். நம் தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த நம் தமிழ் இனத்தவர்கள் சிலர் நம் நாட்டில் இருந்த தொன்மை வாய்ந்த கலை மற்றும் கலாசாரத்தை இன்றும் பல மேலை நாடுகளில் பறைசாற்றி வருகின்றனர். பலர் பல விதமாக தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்து வந்தாலும், மலேசியாவில் மட்டும் சற்று வித்தியாசமாக இந்தத் தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்டி இருப்பது ஓர் ஆச்சரியமான தகவல்தான்.

தமிழ்ப்பாட்டி ஔவைப்பிராட்டி எழுதிய கவிபோல் சற்று மாற்றிக் கூறினால்தான் உங்களுக்குப் புரியும். அதாவது:–

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது

அதனினும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது

அதனினும் அரிது இறைவழிபாட்டில் நம்மை நிலை நிறுத்துவது அரிது

அதனினும் அரிது முருகனை ஏக தெய்வமாக ஏற்று வழிபடுவது அரிது

சிவத்தமிழ் குகமணி **தெ.தனபால்**
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526



**டாக்டர் பாம்பன் மோகனாஜியுடன், அவர் சீடர், இந்தியாவில் இருந்து கும்பாபிஷேகம் காணச் சென்ற திரு.செல்வம் மற்றும் திருமதி செல்வம், மதுரை.**

அதனினும் அரிது அந்த ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய உள்ளூர் சிவசுப்பிரமண்யர் சதகம் பாடலில் கூறிய வண்ணம் அஷ்ட இலக்குமிகளைக் கொண்ட உருவச்சிலையை வடித்திருப்பது அரிது.

அதனினும் அரிது அந்த ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய முதற்பாடலுக்கு ஏற்றாற் போல் முருகனின் கருவறைப் பக்கத்தில் விநாயகரையும், சக்தி சொரூபத்தையும் வைத்து மெய்யடியார்கள் வணங்குவதற்கு ஏற்றாற்போல் வைத்திருப்பது அரிது.

அதனினும் அரிது 2ஆவது திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா தமிழ் வேத வேள்விப்படி நடத்துவது என்பது அரிது.

அதனினும் அரிது தமிழ் வேள்வி அரசர் சக்திவேல் முருகனார் அய்யா அவர்கள் தலைமை ஏற்று வேள்வி நடத்திய விதம் அரிது.

அதனினும் அரிது தமிழ் முறைப்படி தேவாரம், திருப்புகழ், ஸ்ரீமத் பாம்பன்

அதனினும் அரிது முருகனை வணங்கிய ஞானிகளை வழிபடுவது அரிது.

அதனினும் அரிது முருகன் ஒருவனையே ஏக தெய்வமாக வழிபட்ட ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளைப் போன்ற ஞானியரைக் காண்பது அரிது.

அதனினும் அரிது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்களை அடியார்கள் பாடுவது அரிது.

அதனினும் அரிது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் கொள்கைகளை. பறைசாற்றுவது என்பது அரிது.

அதனினும் அரிது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் பாடல்களை கல்வெட்டில் பதித்து பலரும் பயன் பெறும் வண்ணம் செய்வது அரிது

அதனினும் அரிது மேலை நாடான மலேசியாவில் 5 நிலை கோபுரத்துடனும், கலைநயமிக்க சிலைகளுடனும் கூடிய ஸ்ரீமயூரநாதர் ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் எழுந்தருளியிருப்பது அரிது.

அதனினும் அரிது அந்த மயூரநாதர் ஆலயத்தில் ஔவைப் பிராட்டியின் உருவச்சிலை வடித்திருப்பது அரிது.

அதனினும் அரிது அந்த ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவான அருணகிரிநாதர் உருவச்சிலை உருவாக்கியிருப்பது அரிது.



**திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா விமான கலசத்தில் நீர் ஊற்றும் போது அந்த மயில்கள் குகா குகா என்று கூவிய காட்சிகளைக் கண்டு கண்ணீர் மல்கிய அடியார்பெருமக்கள் திருக்கூட்டம்**



சுவாமிகள் பாடல்கள், அபிராமி அந்தாதி மற்றும் சொல் ஜதிகட்டு என்று கூறும் கொன்னக் கோல் ஆகியவை மூலம் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கூறிய மகா மந்திரங்கள் மூலம் நடத்தியது அரிது.

அதனினும் அரிது தமிழ் வேள்வி அரசர் சக்திவேல் முருகனார் அய்யா அவர்கள் வேள்வி நடத்தும் போது அங்கிருந்த மயில்

வேள்விச்சாலையின் அருகில் வந்து பார்த்தது அரிது.

அதனினும் அரிது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய பஞ்சாமிர்த வண்ணம் அதற்குரிய இசையுடன் தமிழ் வேள்வி அரசர் சக்திவேல் முருகனார் பாடி, முருகனில் வேல் என்று வருணிக்கக் கூடிய வஜ்ராயுதத்திற்கு அபிஷேகம் செய்து அடியார்கள் வணங்குவது என்பது அரிது.

அதனினும் அரிது திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா தர்ப்பை மூலம் மூலவர் மயூரநாதனுக்கும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கும் வேத பாராயணமான மந்திரம் கூறும் போதும் மயில் அருகில் அமர்ந்து பார்த்து பரவசம் அடைந்தது அரிது.

அதனினும் அரிது திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா விமான கலசத்தில் நீர் ஊற்றும் போது அந்த மயில்கள் குகா குகா என்று கூவிய காட்சியைக் கண்டு கண்ணீர் மல்கிய அடியார் பெருமக்கள் திருக்கூட்டம் அரிது.



**12.03.14 அன்று விமானங்களுக்கு நன்னீராட்ட மூல கலசம் சிவாச்சாரியார் தலையில் எடுத்துக்கொண்டு கோயிலை வலம் வரும் காட்சி**



**மூலவர் முருகனுக்கும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கும் நன்னீர்சொரிய சிறு கலசங்களைக் கொண்டு செல்லும் அடியார் தெ.தனபால், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர், சென்னை.**

அதனினும் அரிது இந்த ஆலயத்தில் தமிழ் அர்ச்சனை செய்து அடியார்களுக்கு பிரசாதம் கொடுத்தது போன்ற பல அதிசயங்கள் அடங்கியது மிக அரிதாகும்.

இத்தனை சிறப்பு வாய்ந்த ஓர் உலக அதிசயம் கொண்ட கோயில் மேலை நாடான மலேசியாவில் டாக்டர் பாம்பன் மோகனாஜி அவர்களின் தொண்டுள்ளத்துடன், பாம்பன் அடிமை சு.மணியம் அவர்கள் ஆலயத் தலைவராகப் பொறுப்பேற்று, திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொருளாளர் பொறுப்பேற்று, திரு.வேணுகோபால் கும்பாபிஷேகத் தலைவராக இருக்க, சிவஸ்ரீ இராமநாதன் ஆலய குருக்களாகப் பணி செய்தும், திரு.ரெங்கசாமி, கலைநயமிக்க ஓவியங்கள் வரைந்ததுடன் இந்த மகா திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 12.3.14 புதன்கிழமை வளர்பிறை ஏகாதசி திதியும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய



**ஆலயத்தில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவான அருணகிரிநாதர் உருவச் சிலை உருவாக்கியிருப்பது**



**மயூரநாதர் ஆலயத்தில் ஔவைப்பிராட்டியின் உருவச்சிலை வடித்திருப்பது.**

சுபதினத்தில் காலை மணி 6.33 முதல் 7.18க்குள் பஞ்சக சுத்தி கும்ப இலக்னத்தில் குருவருளுடனும், மயில்கள் குகா குகா என்று கூவிக் கொண்டும், மெய்யடியார்கள் முருகா முருகா என்று சொல்லிக் கொண்டும், தமிழ் மறை என்று



**ஸ்ரீ மயூர நாதர் ஆலயத்தலைவர் பாம்பன் அடிமை சு.மணியம், திருமதி சு.மணியம், கும்பாபிஷேகத் தலைவர் திரு.வேணுகோபால் அவர்களுடன் திரு.விஷ்ணு**

கூறப்படும், தேவாரம், திருப்புகழ், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்களுடன் இனிதே நடைபெற்றது.



**வேள்விச்சாலையில் வேள்வி அரசர் சக்திவேல் முருகனார் அய்யா அவர்கள் மகா மந்திரங்களை உச்சரிப்பது**

இத்தனை சிறப்பு வாய்ந்த இந்த ஸ்ரீமயூரநாத ஆலய திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு இந்த அடியேனையும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அழைத்தது -



**வேள்விச்சாலையில் வேள்வி அரசர் சக்திவேல் முருகனார் அய்யா அவர்கள் மகா மந்திரங்களை உச்சரிக்கும் போது மயில் வந்து காணுகின்ற காட்சி**

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று தான் நினைக்கத் தோன்றுகின்றது. இப்படிப்பட்ட ஒரு



மயூர நாதர் ஆலயத்தில் வரைந்துள்ள ஓவியங்களில் ஒன்று.



ஸ்ரீ மயூர நாதர் ஆலயத்தில் உள்ள கருவறை புகைப்படம்.

திருவிழாவை தமிழ் மக்களாகிய நாம் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

**இக்கட்டுரையின் முக்கிய நோக்கம்:-**

நம் பாரத தேசத்தின் உயரிய கலாசாரத்தையும், தமிழ் மண்ணில் தோன்றிய வேதங்களாகத் திகழும், தேவாரம், திருப்புகழ், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடல்கள், அபிராமி அந்தாதி ஆகியவற்றை நம் வாழ்வில் கண்டிப்பாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அதுமட்டும் அல்லாமல் நம் தலைமுறைகளுக்கு முறையாக சொல்லிக் கொடுக்க வேண்டும். மேலும் தமிழ் நாட்டிலும் மற்றும் வேறு எந்த மாநிலத்திலும் அல்லாது மேலை நாடுகளிலும், தமிழ் வேத முறைப்படி பூஜைகள் செய்ய வேண்டும். மற்றும் தமிழ் வேத முறைப்படி திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக்கள் ஏற்பாடு செய்து செம்மொழித் தரத்தைப் பெற்ற நம் தமிழ் மொழியைப் பறைசாற்றுவதையே நம்முடைய தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த எளியேனின் ஆசையாகும். மேலும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின் புகைப்படத் தொகுப்பு, மற்றும் வீடியோ ஆகியவற்றை தாங்கள் பார்க்க விரும்பினால் www.pambanswamigal.netல் உள்ள facebook இணையதளத்திலும், www.youtube-ல் அடியேனுடைய Channel லில் சென்றும் காணலாம்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**